# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டம்

---

*[1983, ஒத்தோபர் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஒத்தோபர் மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.10 தபாற் செலவு : சதம் 75

## 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டம்

[1983, ஒத்தோபர் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 40/82
1555

**கிரமமான சேவைகளுக்காக வசுவண்டிகளைப் பயன்படுத்துவதற்கு தனியார் வசுவண்டி இயக்குநர்களுக்கு அதிகாரமளிப்பதற்கும், மாவட்ட தனியார் வசுவண்டி இயக்குநர் கழகங்களையும், தனியார் வசுவண்டி இயக்குநர் கழகங்களின் சம்மேளனமொன்றினையும் தாபிப்பதற்கும், மோட்டார் வாகனச் சட்டத்தினைத் திருத்துவதற்கும், இவற்றுடன் தொடர்புபட்ட கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**இச்சட்டத்தினை நிருவகித்தல்.**

2. (1) இச்சட்டத்தின் பொதுவான நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருக்கவேண்டியவரான (இதனகத்துப்பின்னர்"பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) தனியார் வசுவண்டிப் போக்குவரத்துப் பணிப்பாளராக இருப்பதற்கென அல்லது செயலாற்றுவதற்கென ஆள் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை கொண்ட தனியார் வசுவண்டிப் போக்குவரத்துப் பிரதிப் பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும் அத்தகைய வேறு அலுவலர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான பணிப்பாளரின் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, பணிப்பாளரின் பணிப்புரைகளின்கீழ் எவரேனும் பிரதிப் பணிப்பாளரால் அல்லது உதவிப் பணிப்பாளரால், பிரயோகிக்குமாறு அல்லது புரியுமாறு அல்லது நிறைவேற்றுமாறு பணிப்பாளரின் கைப்பட்ட எழுத்தில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரான வேறு அலுவலரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

**கிரமமான சேவைகளுக்குப் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுகள்.**

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான பிராந்தியப் போக்குவரத்துச் சபை ஒன்று தவிர, இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளரால் வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான படிநிலைப்பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றன் அதிகாரத்தின்கீழன்றி, ஆள் எவரும், நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் பயணிகளைக் கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காக கொண்டுசெல்லும் கிரமமான சேவை ஒன்றன் நோக்கத்திற்காக வசுவண்டி ஒன்றினைப் பயன்படுத்துதலாகாது.

வசுவண்டி மூலம் பயணிகளைக் கொண்டுசெல்வதற்கு அதிகாரமளித்தல்,

4. இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்று, அதனை வைத்திருப்பவர், எந்த வண்டியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராக இருக்கிறாரோ அந்த வசுவண்டி ஒன்றினை, அத்தகைய அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்பட்டுள்ள மார்க்கத்தில் அல்லது மார்க்கங்களில் பயணிகளைக் கொண்டுசெல்வதற்கென அந்த அனுமதிச்சீட்டில் இணைக்கப்பட்டுள்ளதான நிபந்தனைகளுக்கு இணங்க கிரமமான சேவை ஒன்றுக்காக பயன்படுத்துவதற்கு அவரை உரித்துடையவராக்குவதாதல் வேண்டும்.

படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றுக்கான விண்ணப்பம்.

5. (1) இச்சட்டத்தின்கீழ் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்த வசுவண்டி தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதோ அந்த வசுவண்டியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பணிப்பாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுக்கான விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டதான அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள கூற்றொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) எந்த மார்க்கத்தில் அல்லது மார்க்கங்களில் அத்தகைய வசுவண்டியைக் கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காக பயணிகளைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அந்த மார்க்கத்தின் அல்லது மார்க்கங்களின் விபரங்கள்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் அவரது தற்றுணிபை 6 ஆம் பிரிவின்கீழ் பிரயோகிக்கும் நோக்கத்திற்குத்தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

அனுமதிச்சீட்டுகளுக்கான விண்ணப்பங்களைக் கையாளுதல்.

6. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றினை, ஒன்றில் வழங்குவதற்கு அல்லது வழங்க மறுப்பதற்கு அல்லது அதனைப் புதுப்பித்து வழங்குவதற்கு முழுத் தத்துவமும் தற்றுணிபும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர், படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றினை வழங்குதல் அல்லது வழங்க மறுத்தல் தொடர்பாக அல்லது அதனைப் புதுப்பித்து வழங்குதல் தொடர்பாக அத்துடன் அனுமதிச்சீட்டுகள் எந்த மார்க்கம் அல்லது மார்க்கங்கள் தொடர்பில் வழங்கப்படக்கூடியவையோ அந்த மார்க்கம் அல்லது மார்க்கங்கள் தொடர்பாக அவரது தற்றுணிபைப் பிரயோகிப்பதில், கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளைக் கொண்டு செல்லும் வசதிகள் தேவைப்படுபவர்களும், இவ்வசதிகளை வழங்குபவர்களும் ஆன ஆட்களின் நலன்கள் உட்பட, பொதுவாகப் பொது மக்கள் நலன்களை தொடக்கநிலையாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தற்றுணிபைப் பயன்படுத்து

வதில் குறிப்பாகப் பின்வரும் கருமங்களையும் கருத்திற்கொள்ளுதலும் வேண்டும் :—

(அ) பயணிகளைக் கொண்டுசெல்லுதற்கான உத்தேசம் பொது மக்கள் நலனுக்கு எந்த அளவுக்கு அவசியமானது அல்லது விரும்பத்தக்கது ;

(ஆ) உத்தேச மார்க்கத்தின் அல்லது மார்க்கங்களின் பொருத்தமாந்தன்மை ;

(இ) உத்தேச மார்க்கத்தின் அல்லது மார்க்கங்களின் அல்லது ஏதேனும் அத்தகைய மார்க்கத்தின் தேவைகள் எற்கனவே எந்த அளவுக்கு (ஏதேனும் இருப்பின்) போதுமானவகையில் சேவையளிக்கப்பட்டுள்ளது ;

(ஈ) (போதுமான, பொருத்தமான, அத்துடன் செயற்றிறனுள்ள சேவைகளை ஏற்பாடுசெய்தல் உட்பட) வாகனுதிகள் தொடர்பாக மொத்தத்தில் இடப்பரப்பின் தேவைகளும், அத்துடன் புகையிரதப் போக்குவரத்து உட்பட எல்லா வகையினவையுமான பயணிகள் போக்குவரத்தை ஒருங்கிணைத்தலும் ;

(உ) (புகையிரதச் சேவையினுல் ஏற்பாடுசெய்யப்பட்ட வசதிகள் உட்பட) ஏதேனும் இடப்பரப்பில் அல்லது ஏதேனும் மார்க்கத்தில் உள்ள எவையேனும் போக்குவரத்து வசதிகள், பணிப்பாளரின் அபிப்பிராயத்தில் அந்த இடப்பரப்பினுள் அல்லது அந்த மார்க்கத்தில் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை நியாயமான விதிப்பனவின்மீது திருப்திசெய்ய திருப்திகரமானவையாகவும் செயற்றிறனுள்ளவையாகவும் இருக்குமிடத்தெல்லாம், சொல்லப்பட்ட போக்குவரத்து வசதிகளுக்குப் போட்டியாகப் பெருமளவில் அதே இடப்பரப்பினுள் அல்லது பெருமளவில் அதே மார்க்கத்தில் பயணிகளைக் கொண்டுசெல்வதற்கு அதிகாரமளிக்கும் அனுமதிச்சீட்டு ஒன்றினை வழங்குதல் விரும்பத்தகாதது என்ற கருத்துரை.

7. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய கட்டணம் அல்லது கட்டணங்கள் பணிப்பாளருக்கு எவரேனும் ஆளினுல் கொடுப்பனவு செய்யப்பட்டாலன்றி, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் எவருக்கும் பணிப்பாளரினுல் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு எதுவும் வழங்கப்படுதலாகாது. *படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுக்களின் காலநீட்சி முதலியன.*

(2) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும்—

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அது முன்னரே இல்லாதாக்கப்பட்டிருந்தாலன்றி, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலப் பகுதிக்கு வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

அனுமதிச்சீட்டுகளுடன் இணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள்.

8. இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு எதனுடனும்—

(அ) விதிக்கப்படவேண்டியவையான பயணக்கூலிகள் பணிப்பாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகையன வாக இருத்தல் வேண்டும் என ;

(ஆ) அனுமதிச்சீட்டின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப் படுவதான வசுவண்டி, அனுமதிச்சீட்டில் குறித் துரைக்கப்பட்ட அத்தகைய மார்க்கத்தில் அல்லது மார்க்கங் களில் தொழிற்படுத்தப்பட வேண்டும் என ;

(இ) நேர அட்டவணை (தேவைப்படுமிடத்து) அத்துடன் பயணக் கூலி அட்டவணை ஆகியனவற்றின் பிரதிகள், அனுமதிச்சீட் டின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டி யில் கொண்டுசெல்லப்படுதலும் வெளிக்காட்டி வைக்கப் படுதலும் வேண்டும் என ;

(ஈ) அனுமதிச்சீட்டின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டியானது, தகுதியானதும், சேவையிலீடுபடுத் தற்பாலதுமான ஒரு நிலைமையில் எல்லா நேரங்களிலும் பேணப்படுதல் வேண்டும் என ;

(உ) அனுமதிச்சீட்டின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளின் சாரதியினதும், நடாத்துநரினதும் விடயத்தில், வசுவண்டிகளின் சாரதிகள் அல்லது நடாத்து நர்கள் தொடர்ச்சியாகக் கடமையில் இருக்கக்கூடிய நேரம், அவர்களது வேலை அல்லது ஓய்வுநேரங்கள், அத்துடன் அவர்களின் கூலிகள் தொடர்பிலான ஏதேனும் எழுத் திலான சட்டத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றன என,

தேவைப்படுத்துவதான நிபந்தனைகள் உட்பட, பொதுமக்களின் பாதுகாப்பினையும் வசதியினையும் உறுதிப்படுத்துவதற்கெனப் பணிப் பாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா நிபந்தனைகளும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அனுமதிச்சீட்டுகளில் அதிகாரமளிக்கப்பட்ட வசுவண்டியைக் குறித்துரைத்தல்.

9. இச்சட்டத்தின்கீழ் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட் டொன்றினை வழங்கும் நேரத்தில், பணிப்பாளரானவர், எந்த வசுவண்டியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிச்சீட்டால் அதிகார மளிக்கப்பட்டதோ அந்த வசுவண்டியை அதன் வேறுபடுத்திக்காட்டும் இலக்கத்தையும், அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் குறிப்பிடுவதன் மூலம், அதனை கத்து குறித்துரைக்கலாம்.

**பணிப்புரைகள் வழங்குவதற்கான பணிப்பாளரின் தத்துவம்.**

**10.** இச்சட்டத்தின்கீழ் எந்த ஆளுக்குப் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆளெவருக்கும், இந்தச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் அத்தகைய ஆளை இணங்கியொழுகச் செய்யும் நோக்கத்துக்காக அவசியமெனத் தாம் கருதக் கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளெவற்றையும் பணிப்பாளர் வழங்கலாம் என்பதுடன், எந்த ஆளுக்கு அத்தகைய பணிப்புரைகள் வழங்கப்படுகின்றனவோ அந்த ஆள், அத்தகைய பணிப்புரைகளில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலத்திற்குள் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

**அனுமதிச்சீட்டுகள் கைமாற்றப்படற்பாலனவாதலாகாது.**

**11.** இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டெதுவும் வேறெவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதலாகாது என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய கைமாற்றமெதுவும் வெற்றானதும் வறிதானதுமாதலும் வேண்டும்.

**அனுமதிச்சீட்டுகள் வைத்திருப்போர் விபர மாற்றம் எதனையும் பற்றிப் பணிப்பாளருக்குத் தகவல் கொடுத்தல்.**

**12.** படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றை வைத்திருப்பவர், படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றுக்கான தமது விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விபரங்களில் ஏற்பட்ட மாற்றம் எதனையும், அம்மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய மாற்றம் பற்றிப் பணிப்பாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

**அனுமதிச்சீட்டைப் புதுப்பித்தல்.**

**13.** (அ) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு வைத்திருப்பவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியைக் கடைப்பிடித்துள்ளார் அல்லது இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான எந்தத்தவறுக்கும் குற்றத்தீர்ப்பளிக்கப்படவில்லை எனப் பணிப்பாளர் திருப்திப்பட்டால்; அத்துடன்

(ஆ) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு வைத்திருப்பவர், அனுமதிச்சீட்டைப் புதுப்பித்தற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தினால்,

பணிப்பாளரானவர் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டை, அத்தகைய அனுமதிச்சீட்டு வைத்திருப்பவரால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், அனுமதிச்சீட்டு முடிவடைந்த தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கலாம்.

**அனுமதிச்சீட்டொன்றை இல்லாதாக்குதல்.**

**14.** (1) படிநிலைப்பயணவண்டி அனுமதிச்சீட்டு வைத்திருப்பவர்—

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென;

(ஆ) 10 ஆம் பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் இணங்கியொழுகவில்லையென; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அவரால் அனுப்பப்படும் ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது விபரத்திரட்டில், அல்லது ஏதேனும் எழுத்திலான தகவலில் அல்லது எழுத்திலான விளக்கத்தில், தமது அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள எவையேனும் விபரங்களைக் கொடுத்துதவியுள்ளாரென,

பணிப்பாளர் திருப்திப்பட்டால், அனுமதிச்சீட்டெதனையும் அவர் இல்லாதாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுமதிச்சீட்டொன்றினை இல்லாதாக்குதலானது, பணிப்பாளரின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான காலம் முடிவடையும்வரை, அல்லது மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தால் மேன்முறையீடு கேட்டுத்தீர்க்கப்படும்வரை, பயனுறுதலாகாது.

**பணிப்பாளரானவர், தமது முடிபை, அதற்கான காரணங்களுடன் சேர்த்து விண்ணப்பகாரருக்கு அல்லது அனுமதிச்சீட்டு வைத்திருப்பவருக்கு அறிவித்தல்.**

**15.** பணிப்பாளரானவர் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க மறுப்பதற்கு அல்லது ஓர் அனுமதிச்சீட்டை இல்லாதாக்க முடிபுசெய்துள்ளவிடத்து, அவர் விடயத்துக்கேற்ப விண்ணப்பகாரருக்கு அல்லது அனுமதிச்சீட்டு வைத்திருப்பவருக்குத் தமது முடிபை அதற்கான காரணங்களுடன் சேர்த்து எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகள்.**

**16.** (1) (அ) படிநிலைப்பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றினை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கின்றதான; அல்லது

(ஆ) அனுமதிச்சீட்டை இல்லாதாக்குகின்றதான,

பணிப்பாளரின் முடிபொன்றினால் இன்னலுறுபவரான அந்த அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பகாரர் அல்லது அனுமதிச்சீட்டொன்றை வைத்திருப்பவர், எந்தத் தேதியன்று அவருக்கு அம்முடிபு அறிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அம்முடிபுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) செயலாளரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு எதன்மீதும்—

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து, அத்துடன் அனுமதிச்சீட்டை வழங்குமாறு அல்லது புதுப்பிக்குமாறு பணிப்பாளருக்குப் பணிப்புரை வழங்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டை அனுமதிக்காதுவிடலாம்.

(3) பணிப்பாளரானவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பணிப்புரை எதனுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

17. இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும், எந்த வசுவண்டி தொடர்பில் அந்த அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டதோ அந்த வசுவண்டியின் வெளித்தடுப்புமீது துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

**அனுமதிச்சீட்டு வெளித்தடுப்பு மீது வெளிக் காட்டி வைக்கப் படுதல்.**

18. பணிப்பாளரானவர் இச்சட்டத்தின்கீழ், தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், தமது கடமைகளைப் புரிகையிலும் அமைச்சரின் பொதுப் பணிப்புக்கு அமைந்தவராதல் வேண்டும்.

**அமைச்சரின் பொதுப் பணிப் புக்குப் பணிப் பாளர் அமைந்தவ ராதல்.**

19. பணிப்பாளரானவர், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றை வைத்திருப்பவராகவுள்ள ஆளெவருக்கும், பணிப்பாளர் இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காகவும், கடமைகளைப் புரியும் நோக்கத்திற்காகவும் அவருக்குத் தேவைப்படக்கூடியவாறான ஏதேனும் விபரத்திரட்டினை, தகவலை அல்லது விளக்கத்தை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துகின்ற எழுத்திலான ஓர் அறிவித்தலைக் கொடுக்கலாமென்பதுடன், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

**விபரத்திரட்டுகள் முதலியன.**

20. (1) அமைச்சரானவர், நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் கூடியளவு விரைவில், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம்—

**மாவட்டத் தனியார் வசுவண்டி இயக்குநர் கழகங்களை அமைத்தல்.**

(அ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்கும், இதனகத்துப் பின்னர் "மாவட்டக் கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும் மாவட்டத் தனியார் வசுவண்டி இயக்குநர் கழகமொன்றை அமைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு அமைக்கப்பட்ட மாவட்டக் கழகத்துக்கு ஒரு பெயரைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்படும் மாவட்டக் கழகமொவ்வொன்றும், இடையறுவழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கழகத்தை அமைக்கின்ற கட்டளையினால் அதற்குக் குறித்தொதுக்கப்படுகின்ற அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றை வைத்திருப்பவரான ஆளொவ்வொருவரும் (அவர் இதனகத்துப்பின்னர் "தனியார் வசுவண்டி இயக்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்பட்ட மார்க்கத்தின் தொடக்க இடம் எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டக் கழக உறுப்பினரொருவராகவிருத்தல் வேண்டும்.

மாவட்டக் கழகத்தின் பணிகள்.

21. மாவட்டக் கழகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) கழகத்தின் உறுப்பினர்களால் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிரமமான வசுவண்டிச் சேவைகள் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளைச் சமாளிக்கத்தக்கவையான அத்தகையவையாக உள்ளன என்பதை உறுதிப்படுத்தல் ;

(ஆ) வசுவண்டி அட்டவணைகளை இடுதலும் அவற்றின் செயற்பாட்டை வலியுறுத்துதலும்;

(இ) பயணிகளின் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் அத்துடன் ஏற்பாடுசெய்யப்பட்ட சேவைகளின் செயற்திறனையும் உறுதிப்படுத்தல்;

(ஈ) தரிப்பிடக் காப்பாளர், சோதனையாளர் அத்துடன் அவசியமாகக்கூடியவாறான வேறு பணியாட்டொகுதியினர் என்போரை நியமித்தலும், அவர்கள் தொடர்பான எல்லா ஒழுக்காற்றுக் கருமங்களையும் கையாளுதலும்;

(உ) உறுப்பினர்களின் சார்பில் தரிப்புக் கட்டணங்களையும் வேறு விதிப்பனவுகளையும் செலுத்துதல்;

(ஊ) கழகத்தின் முறையான பணியாற்றுகைக்காக அவசியமானவாறான அத்தகைய அறவீடுகளை உறுப்பினர்களிடமிருந்து அறவிடுதல்;

(எ) அவசியமாகின்றவிடத்து, மார்க்க அனுமதிச்சீட்டுகளிலான மாற்றங்களைச் சம்மேளனத்தினூடாகப் பணிப்பாளருக்கு விதந்துரைத்தல்; அத்துடன்

(ஏ) ஒப்புரவான திரும்புநேர அட்டவணைகளையும் பயணிகள் தொகையையும் உறுதிப்படுத்தும் நோக்கொன்றுடன் ஏனைய மாவட்டக் கழகங்களுடனும் சம்மேளனத்துடனும் இணைந்து செயலாற்றுதலும் ஒருங்கிணைதலும்.

ஒரு மாவட்டக் கழகத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

22. (1) மாவட்டக் கழகம் ஒவ்வொன்றும் தலைவர், செயலாளர், பொருளாளர், அத்துடன் வேறு ஐந்து உறுப்பினர்கள் என்போரைக்கொண்ட முகாமைக் குழுவொன்றைக் கழகத்தின் அலுவல்களை நிருவாகம் செய்வதற்கெனத் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் கழகம் ஒவ்வொன்றும், முகாமைக் குழுவைத் தேர்ந்தெடுத்ததன் பின்னர், முகாமைக் குழுவிடையேயிருந்து, தனியார் வசுவண்டி இயக்குநர் கழகச் சம்மேளனத்தில் அதன் நியமத்தராக இருப்பதற்கென உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) மாவட்டக் கழகம் ஒன்றன் முகாமைக் குழுவின் பதவிக்காலம் ஓர் ஆண்டாக இருத்தல் வேண்டும்.

23. (1) மாவட்டக் கழகங்களின் நியமத்தர்களைக் கொண்டுள்ளதான (இதனகத்துப்பின்னர் "சம்மேளனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தனியார் வசுவண்டி இயக்குநர் கழகங்களின் சம்மேளனம் என அழைக்கப்பட வேண்டியதான சம்மேளனம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். **தனியார் வசுவண்டி இயக்குநர் கழகங்களின் சம்மேளனத்தைத் தாபித்தல்.**

(2) சம்மேளனமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டதான பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றினையும் கொண்டதாக இருத்தலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கு எதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) சம்மேளனத்தின் இலச்சினையானது —

(அ) சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவினது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றியமைக்கப்படலாம் , அத்துடன்

(இ) சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழுவின் அனுமதியுடனும், அவர்கள் சமுகமாக இருந்ததற்கு அடையாளமாக, சாதனத்தினை அல்லது ஆவணத்தினை ஒப்பமிட வேண்டியவர்களான நிறைவேற்றுக் குழுவின் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் சமூகமாயிருந்தாலுமன்றி, எந்தச் சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதலாகாது.

24. சம்மேளனத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:— **சம்மேளனத்தின் பணிகள்.**

(அ) மாவட்டக் கழகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்;

(ஆ) ஏதேனும் மாவட்டக் கழகத்தால் அல்லது எவையேனும் மாவட்டக்கழகங்களால் சம்மேளனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகளையும் உடன்பாடின்மைகளையும் தீர்த்தல் ;

(இ) அவசியமானவை எனக் கருதப்படுகின்றவாறான மார்க்க அனுமதிச்சீட்டு மாற்றங்களைப் பணிப்பாளருக்கு விதந்துரைத்தல் ;

(ஈ) நாட்டிலுள்ள எல்லா இடப்பரப்புகளினதும் போக்குவரத்துத் தேவைகளை மதிப்பீடு செய்தலும் எல்லா இடப்பரப்புகளுக்கும் போதுமான சேவையளிக்கப்படுவதை உறுதிப்படுத்துதலும் ; அத்துடன்

(உ) தனியார் வசுவண்டித் தொழில் தொடர்பான எல்லாக் கருமங்கள் பற்றியும் அமைச்சருக்கும் பணிப்பாளருக்கும் முறையீடுகள் செய்தல்.

சம்மேளனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

**25.** (1) சம்மேளனத்தின் அலுவல்கள்—

(அ) தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரையும், அத்துடன் சம்மேளனத்தின் உறுப்பினர்களால் தம்முள் இருந்து அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான வேறு மூன்று உறுப்பினர்களையும் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தனியார் வசுவண்டிப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஒரு பிரதிநிதியையும்,

கொண்டிருப்பதான சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் பதவிக்காலம் ஓர் ஆண்டாக இருத்தல் வேண்டும்.

மாவட்டக் கழகங்களினதும் சம்மேளனத்தினதும் பொதுத் தத்துவங்கள்.

**26.** இந்தச் சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக மாவட்டக்கழகம் ஒன்றினது முகாமைக் குழு, அல்லது சம்மேளனத்தினது நிறைவேற்றுக் குழு மாவட்டக்கழகம் ஒன்றின் அல்லது சம்மேளனத்தின் சார்பில், விடயத்திற்கு ஏற்ப மாவட்டக்கழகம் ஒன்றின் அல்லது சம்மேளனத்தின் பணிகளைப் புரிவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவையான எத்தன்மைத்தானவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் தத்துவம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

மாவட்டக் கழகங்களினதும் சம்மேளனத்தினதும் நடவடிக்கைமுறை முதலியன.

**27.** மாவட்டக் கழகங்களினது முகாமைக் குழுவினையும் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவினையும் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைமுறை தொடர்பிலும், மாவட்டக் கழகங்களினதும் அவற்றின் முகாமைக் குழுக்களினதும், அத்துடன் சம்மேளனத்தினதும் அதன் நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டங்களைக் கூட்டுதல் தொடர்பிலும் அவற்றின் அலுவல்களைக் கொண்டு நடாத்தல் தொடர்பிலும் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய ஒழுங்குவிதிகள் எவற்றிற்கும் அமைவாக, மாவட்டக் கழகம், சம்மேளனம் அல்லது குழு அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம்.

தனியார் வசுவண்டிகளுக்கான பொதுநிறுத்திடங்கள்.

**28.** (1) நகர இடப்பரப்பு எதற்குமான உள்ளூர் அதிகாரசபை அந்த இடப்பரப்புக்குள்ளாக தனியார் வசுவண்டிகளின் புறநீங்கலான பயன்பாட்டுக்கென ஒரு பொதுநிறுத்திடத்தை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதுநிறுத்திடங்களை ஏற்பாடுசெய்யலாம்.

(2) ஏதேனும் நகர இடப்பரப்புக்கென (1) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ளூர் அதிகாரசபையால் செய்யப்பட்டதான பொதுநிறுத்திடங்களுக்கான ஏற்பாடு, திருப்திகரமற்றது எனப் பணிப்பாளர் திருப்திப்படுகின்ற விடயம் எதனிலும், உள்ளூரதிகார சபையின் அங்கீகாரத்துடனும் மோட்டார்வாகன ஆணையாளரின் கலந்தாலோசனையுடனும், அவ்வாறு ஆக்கப்படவுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, அந்த இடப்பரப்புக்குள்ளாக பொதுநிறுத்திடங்களைத் தாபிப்

பதற்கும் பேணுவதற்கும் பணிப்பாளர் அவசியமானவை எனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பணிப்பாளருக்குத் தத்துவமளிக்கின்ற அத்தகைய ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

29. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டும் என இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும்,(1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றியும், அமைச்சரானவர், பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுபவையான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுகளின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளில் கொண்டுசெல்லப்பட வேண்டியதான தகட்டுப்படிவங்களும் அடையாளக் குறிகளும் ;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுபவையான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுகளின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளின் சாரதிகளால் அல்லது நடாத்துநர்களால் கொண்டுசெல்லப்பட வேண்டிய ஆவணங்களும் அவற்றின்கண் பதியப்பட வேண்டியனவான விபரங்களும் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றன் அதிகாரத்தின் கீழ் வசுவண்டி ஒன்றினைப் பயன்படுத்துபவரான எவரேனும் ஆளினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய நியமங்கள் அத்துடன், அத்தகைய நியமங்களுக்கு மீறுகையான செயல்களை அல்லது செய்யாமைகளைத் தடைசெய்தல் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றன் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டி ஒன்றினால் புரியப்பட்ட பிரயாணங்கள் தொடர்பில் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகள் ;

(உ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுகளை வைத்திருப்பவர்களால் அத்தகைய அனுமதிச்சீட்டுகளின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளின் சாரதிகளாக அல்லது நடாத்துநர்களாக ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் தொடர்பிலும், அத்தகைய ஆட்கள் வேலையைத் தொடங்கி முடிக்கும் நேரங்கள், அத்துடன் அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும் இடைவேளைகள் என்பன தொடர்பிலும் அத்தகைய வைத்திருப்போரால் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகள் ;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் வைத்திருக்கப்படும் பதிவேடுகளைப் பேணிக்காத்தல், ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படும் எவரேனும் அதிகாரியால் அத்தகைய பதிவேடுகள் பார்வையிடப்படுதல், அத்துடன் அத்தகைய அதிகாரி அத்தகைய பதிவேடுகளை அவ்வாறு பார்வையிடும் நோக்கங்களுக்கென தரும்படி கோரும்போது அத்தகைய பதிவேடுகளைக் காண்பித்தல் ;

(எ) மாவட்டக் கழகங்களினதும் சம்மேளனத்தினதும் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை, அத்துடன் மாவட்டக் கழகங்களாலும் சம்மேளனத்தினாலும் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைமுறை.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின் இயன்ற அளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன் அங்கீகாரத்திற்கெனக் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்கு விதி எதுவும், அத்தகைய அங்கீகாரமறுப்புத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதியானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தவறுகள்.

30. இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறிச் செயலாற்றும் அல்லது அவர் அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையான அல்லது பிழையானவையான எவையேனும் விபரங்களைக் கொண்டுள்ள ஏதேனும் விபரத்திரட்டினை, எழுத்திலான தகவலை அல்லது எழுத்திலான விளக்கத்தினைக் கொடுத்துதவுபவரான ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தண்டங்கள்.

31. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓர் ஆண்டிற்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

**32.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருந்தால், தவறு புரியப்படுகின்ற நேரத்தில் அந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது வேறு அதே போன்ற அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாக இருந்தால், தவறு புரியப்படுகின்ற நேரத்தில் அந்தக் குழுமத்தின் பங்காளராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்,

அத்தவறு, தான் அறியாமல் அல்லது அவரது உட்கையின்றி புரியப்பட்டதெனவும், அவர் தமது பணிகளின் தன்மையினையும் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப் படுவதைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லாவிழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் எனவும் எண்பித்திருந்தாலன்றி, அத்தவறிற்குக் குற்றவாளியெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினால் புரியப்படும் தவறுகள் தொடர்பில் குறித்த சில ஆட்களுக்குள்ள பொறுப்பு.

**33.** மோட்டார் வாகனச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :—

203 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.

(1) அதன் 28 ஆம் பிரிவில், அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட் பிரிவினை இடுவதன் மூலமும் :—

(1) ''ஒரு வசுவண்டியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர்—

(அ) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையாக அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச்சபையாக; அல்லது

(ஆ) சிற்சில சமயங்களில் வசுவண்டிச் சேவைகளை நடாத்துவதற்காக படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுகளுக்கான தகவுச் சான்றிதழ் ஒன்றினை வைத்திருப்பவராக; அல்லது

(இ) 1983 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கிரமமான வசுவண்டிச் சேவை ஒன்றுக்கான படிநிலைப் பயண வண்டி அனுமதிச்சீட்டு ஒன்றினை வைத்திருப்பவராக,

இருந்தாலன்றி, அவ்வசுவண்டிக்கென இப்பாகத்தின்கீழ் வசுவண்டி உரிமம் எதுவும் வழங்கப்படலாகாது.'';

(2) அதன் 46 ஆம் பிரிவில், அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாப் பின்வரும் உட் பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(1) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் பின்னர், இப்பாகத்தின் கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்டதான அல்லது 1983 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தனியார் வசுவண்டிச் சேவைகள் சட்டத்தின்கீழ் தனியார் வசுவண்டிப் போக்குவரத்துப் பணிப்பாளரால் வழங்கப்பட்டதும், அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ஒன்றன் அதி காரத்தின் கீழன்றி, வசுவண்டி எதுவும் பெருவழி எதனி லும் பயன்படுத்தப்படுதலாகாது."; அத்துடன்

(3) அதன் 239 ஆ என்னும் பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவினை இடுவதன் மூலமும் :—

"கிரமமான வசுவண்டிச்சேவைகளுக்கு படிநிலைப்பயணவண்டி அனுமதி சீட்டுகள் வழங்கலைத் தடைசெய்தல்.

239ஆ. இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் முரணைது எது எப்படியிருப்பினும் கிரமமான ஒரு வசுவண்டிச் சேவைக்கான படிநிலைப் பயணவண்டி அனுமதிச் சீட்டு ஒன்று எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுதலாகாது." .

நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு களைச் செல்லுபடியாக்கல்.

34. (1) இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், தனியார் வசுவண்டிப் போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ளவரான அமைச்சரின் அமைச்சின் செயலாளரால், நிய மிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காக பயணிகளைக் கொண்டு செல்வதற்கு கிரமமான வசுவண்டிச் சேவை ஒன்றினைத் தொழிற்படுத்தும் நோக்கத்திற்கு வசுவண்டி ஒன்றினை எவரேனும் ஆள் பயன் படுத்துவதற்கு அதிகாரம் வழங்குவதான அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும், சட்டமுறையானதாகவும் செல்லுபடியானதாக வும் வழங்கப்பட்டிருப்பதாகவும் வழங்கப்படுவதாகவும் கருதப்படு தல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய அனுமதிச் சீட்டினைப் பின்பற்றி செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம் சட்டமுறையாகச் செய்யப்பட்டிருப்பதாகவும் செய் யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய அனுமதிச்சீட்டு எதுவும் நியமிக்கப்பட்ட தேதியின் பின்னர் முடிவடையவுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிச்சீட்டானது, அது முன்னரே இல்லாததாக்கப்பட்டிருந்தாலன்றி, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இச் சட்டத்தின்கீழ் தனியார் வசுவண்டிப் போக்குவரத்துப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட படிநிலைப் பயண வண்டி அனுமதிச்சீட்டு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்பட்ட முடிவடை யும் தேதிவரை செல்லுபடியானதாக இருத்தலும் வேண்டும்.

35. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்திலன்றி— பொருள்கோடல்.

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும், அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றின் நேரொத்த அல்லது அதேபோன்ற தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிக்க, புரிய அத்துடன் நிறைவேற்ற ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட அதிகாரசபை எதனையும் உள்ளடக்கும் ;

"வசுவண்டி" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பயணி" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட, எனப் பொருள் படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 : (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.